பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி – சென்னை – 4

21 05 2018 6 30

திங்கட்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள்-

1. ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு ஆதரவு அளித்த ரஷ்யாவுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று நன்றி தெரிவித்து கொண்டார்.

2. தமிழகத்தில் ஏழாயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு எஸ் பி வேலுமணி கூறியுள்ளார்.

3. தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் நிஃபா வைரஸ் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை செயலர் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

5. ராஜீவ்காந்தியின் நினைவு நாள் இன்று பயங்கரவாத எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டது.

---- *இனி விரிவான செய்திகள்* ----

*******

இந்தியா – ரஷ்யா இடையேயான நட்புறவு நீண்ட நாட்களாக நீடித்து வருவது குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஒரு நாள் அரசுமுறைப் பயணமாக ரஷ்யா சென்றுள்ள பிரதமர், சோச்சி நகரில் அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் புட்டினை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு ரஷ்யா அளித்த ஆதரவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இந்த சந்திப்பு குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ரஷ்ய அதிபர், இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு மற்றும் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

*******

தமிழகத்தில் ஏழாயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அம்ருத் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு எஸ் பி வேலுமணி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று 2023-ஆம் ஆண்டு தொலைநோக்கு திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்டங்கள் குறித்த கருத்தரங்கை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

குடிநீரின் தேவை மற்றும் விநியோகத்தில் உள்ள இடைவெளியை ஈடு செய்வதற்கும், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் இதுவரை பயன்படுத்தப்படாமல் உள்ள நீரை சுத்திகரிப்பு செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கும், கடல் நீரை குடிநீராக மாற்றுவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தில் சென்னை மாநகராட்சியில் 206 குளங்கள் மற்றும் ஏரிகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும், முதல்கட்டமாக வில்லிவாக்கம் சிட்கோ நகர் பகுதியில் உள்ள வில்லிவாக்கம் குளம் உள்ளிட்ட 33 குளங்கள் மற்றும் ஏரிகளில் உள்ள தண்ணீரை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மீஞ்சூரை அடுத்த காட்டுப்பள்ளியிலும், நெம்மேலியிலும் செயல்பட்டு வரும் கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்களின் திறன் நாள் ஒன்றுக்கு 350 மில்லியன் லிட்டர் அளவுக்கு மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் 14 மிகப்பெரிய திட்டங்கள் 21 ஆயிரத்து 50 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும் என்றும் திரு வேலுமணி தெரிவித்தார்.

*******

தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் கல்வி ஆண்டிற்கான சீருடைகளை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

( வாய்ஸ் பைட் - செங்கோட்டையன் -- 46 செக்கெண்ட் )

*******

கால்நடை மருத்துவப் படிப்புக்கு நீட் தேர்வு வருவதற்கான வாய்ப்பு இல்லை என்று கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு உடுமலை ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே கூடமலையில் ஜல்லிக்கட்டுப் போட்டியை தொடங்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கால்நடை பராமரிப்புத்துறைக்குச் சொந்தமான இடத்தில் நவீன கலப்பின தீவனங்கள் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

*******

கேரளாவிலிருந்து , தமிழகத்திற்கு நிஃபா வைரஸ் காய்ச்சல் பரவுவதை தடுக்க தமிழக அரசு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக மாநில சுகாதாரத்துறை செயலர் டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், இந்த காய்ச்சல் பழம் தின்னி வவ்வால்கள் மூலம் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

பொதுமக்கள் இந்த வைரஸ் காய்ச்சல் குறித்து பயப்படத் தேவையில்லை என்றும், சுகாதாரத்துறை போதிய பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே இன்று நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு பிரசாத் எம் வடநேரே, இதுவரை மாவட்டத்தில் நிஃபா வைரஸ் பாதிப்பு இல்லை என்றும், 24 மணி நேரமும் சுகாதாரத்துறை ஊழியர்கள் விழிப்புடன் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தார்.

( வாய்ஸ் பைட் - மாவ ஆ ----36 செக்கெண்ட் )

*******

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 27-வது நினைவு தினம் இன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி, மற்றும் அக்கட்சியின் தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, டாக்டர் மன்மோகன்சிங் உள்ளிட்டோர் ராஜீவ்காந்தி நினைவிடம் அமைந்துள்ள வீர்பூமியில் மலரஞ்சலி செலுத்தினர்.

1991-ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூரில் நடந்த மனித வெடிகுண்டு தாக்குதலில் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார்.

அவரது நினைவு தினம் ஒவ்வொரு ஆண்டும் பயங்கரவாத எதிர்ப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இளைய சமுதாயத்தினரை பயங்கரவாத செயல்களிலிருந்து மீட்டெடுக்கும் நோக்கிலும், வன்முறையால் சாதாரண மக்களுக்கு ஏற்படும் துயரத்தை போக்கும் நோக்கிலும் இந்நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி இன்று நாடு முழுவதிலும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அமைதியையும், சமூக நல்லிணக்கத்தையும் பாதுகாத்து சக மனிதர்களுடன் ஒற்றுமையுடன் வாழ வேண்டியதன் அவசியத்தை இந்நாள் வலியுறுத்துகிறது.

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு திருநாவுக்கரசர், காங்கிரஸ் தலைவர்கள் திரு முனியப்பா, திரு தங்கபாலு உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமிழகத்திலும் ராஜீவ்காந்தி நினைவு நாளையொட்டி பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி அரசு அலுவலகங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் அதிகாரிகளும், ஊழியர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

*******

தென்மேற்கு அரபிக்கடல் பகுதியில் தற்போது நிலை கொண்டுள்ள வலுவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலாக வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்கநர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

( வாய்ஸ் பைட் - பாலச்சந்திரன் -- 35 செக்கெண்ட் )

*******

கடலூர் மாவட்டத்தில் மத்திய அரசின் முத்ரா வங்கி திட்டத்தில் தொழில் முனைவோர் அதிக அளவில் பயன்பெறுள்ளனர்.

சிறுதொழில் வளர்ச்சிக்கு இத்திட்டம் உதவிகரமாக உள்ளது என மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு மாயதேவன் தெரிவிக்கிறார்.

( வாய்ஸ் பைட் -- மாயதேவன் --- 35 செக்கெண்ட் )

*******

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் 12-வது தேசிய நெல் திருவிழா இன்று தொடங்கியது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவில் 144-க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் ரகங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஏர் கலப்பை, கோட்டகம் உள்ளிட்ட பாரம்பரிய விவசாய கருவிகளும், நவீன வேளாண் கருவிகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

கேரளம், கர்நாடகம், ஆந்திரா, தெலங்கானா, மேற்குவங்கம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்தும் விவசாயிகள் தேசிய நெல் திருவிழாவிற்கு வருகை தந்துள்ளனர்.

நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், நீர் மேலாண்மை, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட விவசாயிகளுக்குத் தேவையான தகவல்களை தருவதற்காக கருத்தரங்குகள் மற்றும் விளக்கக் காட்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*******

நெல்லை மாவட்டம் ஆலங்குளம் அருகே உள்ள குறிப்பன்குளத்தில் காற்றாலை டிரான்ஸ்பார்மர் வெடித்து ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

பழுதாகியிருந்த காற்றாலையை சரி செய்து விட்டு, டிரான்ஸ்பார்மரை இயக்கியபோது எதிர்பாரத விதமாக வெடித்தில் இந்த விபத்து ஏற்பட்டது.

*********END OF NEWS*********